## பறிபோகும் சிறுபான்மையினர் உரிமைகள்!

‘சப்கா சாத் சப்கா விகாஸ்’ என்கிற முழக்கம் ஒன்றை (எல்லோருக்கும் எல்லாவற்றையும் கிடைக்கச் செய்வோம்), தொடர்ச்சியாக முன்வைக்கிறார் பிரதமர் மோடி. ஆனால், சிறுபான்மையினச் சமூக மாணவர்களின் கல்வி உரிமைகள் மீது மிக மோசமான தாக்குதல்கள் ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதுதான், அத்துறைக்கு ஒன்றிய அரசு ஒதுக்கும் நிதியில் இருந்து தெரிய வருகிறது.

சிறுபான்மையினர் சமூக மாணவர்களுக்கு ‘ப்ரீ மெட்ரிக்’ உதவித்தொகை வழங்க 433 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என 2023-24 நிதியாண்டில் அறிவிக்கப்பட்டது. அது, 2024-25 நிதியாண்டில் 326.16 கோடி ரூபாயாகக் குறைந்தது. தற்போதைய நடப்பு நிதியாண்டில் (2025-26) 195.70 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. நிதி அறிவிப்பிலேயே, இத்தகைய பாரபட்சத்தை பா.ஜ.க. அரசு நிகழ்த்தியிருக்கிறது என்றால், ஒதுக்கீடு குறித்த விவரங்கள் மேலும் அதிர்ச்சியைத் தருகின்றன. 2023-24 நிதியாண்டில், 95.83 கோடி ரூபாயும், 2024-25 நிதியாண்டில் 90 கோடி ரூபாயும் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தமாக, சிறுபான்மையினர் கல்வி தொடர்பான 6 திட்டங்களுக்கு 2023-24 நிதியாண்டில் 1,689 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டு, 428.74 கோடி ரூபாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. 2024-25 நிதியாண்டில் 1,575.72 கோடி ரூபாய் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதில் 517.20 கோடி ரூபாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருப்பதே 678.03 கோடி ரூபாய்தான் என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

சிறுபான்மையின மாணவர்கள் கல்வி உரிமை மீது கூட, ஏன் இத்தனை வஞ்சனைப்போக்கு என கல்வியாளர்கள் பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்



தொண்டர்படையினர் அணிவகுப்பு!



மருத்துவர் ம.முகமது ரபி

கழகப் பொதுச் செயலாளர் அவர்களால் மாநில இளைஞர் அணி அமைப்பாளராக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 10/04/1983 அன்று இன்றைய கழகத் தலைவர் தளபதியார் அவர்கள், நெல்லையில் இளைஞர் அணி மாநாட்டில் கலந்துகொள்ள வருகை தந்தார். அப்போது தொண்டர்படையினர் அணிவகுப்பைப் பார்வையிட்டு அவர்கள் வரவேற்பை ஏற்றுக் கொண்டார். உடன், அன்றைய மாநிலங்களவை உறுப்பினர் வைகோ, இளைஞர் அணி மாநிலத் துணை அமைப்பாளர் திருச்சி சிவா, அன்றைய நெல்லை மாவட்ட தி.மு.க. செயலாளர் என் தந்தை மஸ்தான், அவர்கள் பின்னால் மருத்துவக் கல்லூரி மாணவன் நான்.

**– மருத்துவர் ம.முகமது ரபி,**
**மஸ்தான் மருத்துவமனை, திருநெல்வேலி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ‘பெரியார் சிலை’ போட்டி!

1974-ஆம் ஆண்டு, கலைஞர் ஆட்சிக்காலத்தில், கழகத்தின் சார்பில் அண்ணா சாலையில் தந்தை பெரியார் சிலை திறக்கப்பட்டது. அந்தச் சிலை திறக்கப்பட்ட அதேநாளில், தி.மு.க. விழாவுக்குப் போட்டியாக அண்ணா மேம்பாலம் அருகே பெரியார் சிலைக்கான பீடம் கட்ட அ.தி.மு.க.வினர் அடிக்கல் நாட்டினர். அரசு அனுமதி அளித்த பின்னர், மூன்றாண்டு காலம் சிலை அமைப்பதற்கான எந்த வேலையையும் அ.தி.மு.க.வினர் செய்யவில்லை.

## பொய்ப்பெட்டி

48

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”

***‘பெரியாரை எதிர்த்து, முதன்முதலாகத் தனி அரசியல் இயக்கம் கண்டு வென்ற பெருந்தகை’ என்று பேரறிஞர் அண்ணாவை திடீரெனப் போற்றுகிறதே, ஒரு புளுகுமூட்டை?***

அடச் சீ..மானங்கெட்டவனே என்று அந்தப் புளுகுமூட்டையுடன் இருந்தவர்களே காரித் துப்புகிற காலம் இது. பெரியார்-அண்ணா காலம் பற்றி, அது ஏதோ உளறிக்கொண்டிருக்கிறது. நாம் வரலாற்றைப் பேசுவோம். அண்ணாவுக்கு முன்பாகவும் சிலர் பெரியாரிடமிருந்து விலகி, தங்களுக்கான இயக்கங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

**“புத்தனாலும் முடியவில்லை. என்னாலும் முடியவில்லை. அண்ணாதான் பகுத்தறிவு ஆட்சியை நிலைநாட்டியிருக்கிறார்” என்று பாராட்டினார் பெரியார்.**



# பேரறிஞர் கற்றது, பெரியாரிடம்தான்!

அவர்களில் சிலர், தனிப்பட்ட முறையில் தேர்தலையும் சந்தித்திருக்கிறார்கள். ஆனால், அண்ணா உருவாக்கிய இயக்கம் என்பது பெரியாரை எதிர்த்து அல்ல. ராபின்சன் பூங்கா திடலில் நடந்த கூட்டத்தில் அண்ணா பேசும்போது, “திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது. திராவிடர் கழகத்திற்குப் போட்டியாக அல்ல” என்று தெளிவாகச் சொன்னார். திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கை மீதேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தனை ஆண்டுகளில் நான் கண்ட-கொண்ட ஒரே தலைவர் பெரியார்தான்” என்றார் அண்ணா. தி.க. என்ற மரத்திலிருந்து உருவான ஒட்டுமாஞ்செடிதான் தி.மு.க. என்று அண்ணா விளக்கியதுடன், தி.மு.க.வின் தலைவர் நாற்காலியை பெரியாருக்காக காலியாக விட்டுவைத்தவர் அவர்.

18 ஆண்டுகள் களத்தில் எதிரெதிராக இருக்க வேண்டிய காலச் சூழல் ஏற்பட்ட போதும், 1967-இல் வெற்றி பெற்று ஆட்சியமைப்பதற்கு முன்பு அண்ணா தன் தம்பிகளுடன் திருச்சிக்குச் சென்று வாழ்த்துப் பெற்றது பெரியாரிடம்தான். பெரியாரின் கனவான சுயமரியாதைத் திருமணச் சட்டத்தை நிறைவேற்றி, இந்த ஆட்சியே பெரியாருக்கு காணிக்கை என்றவர் அண்ணா. “புத்தனாலும் முடியவில்லை. என்னாலும் முடியவில்லை. அண்ணாதான் பகுத்தறிவு ஆட்சியை நிலைநாட்டியிருக்கிறார்” என்று பாராட்டினார் பெரியார். இந்த உண்மைகளைச் சொல்ல வக்கில்லாத புளுகுமூட்டை, யார் தயவும் இல்லாமல் படித்துப் பட்டம் வாங்கியவர் அண்ணா என்று வேறு சொல்லியிருக்கிறது. அண்ணா தன்னுடைய கல்லூரிப் படிப்பு குறித்து எழுதியிருக்கிறார் பேசியிருக்கிறார். அதைவிடவும் பெரியாரிடம்தான் அதிகம் பயின்றேன் என்று சொன்னதுடன், பெரியாருடன் இருந்த காலம்தான் என் வாழ்வின் வசந்தம் என்றும் சொன்னவர் அண்ணா.

...வினா தொடரும்.

**நீரை.மகேந்திரன்**



# இந்தியர்களைக் கைவிட்ட ஒன்றிய அரசு!

2014-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில், ஏப்ரல் மாதம் இந்தியா டி.வி.-யின் ‘ஆப் கி அதாலத்’ நிகழ்ச்சியில், குஜராத் முதல்வராக இருந்த மோடி பங்கேற்றார். அந்தத் தேர்தலில் அவர்தான் பா.ஜ. கட்சியின் பிரதமர் வேட்பாளர் என்பதாக பிரச்சாரம் செய்யப்பட்டுக்கொண்டிருந்தது.

குஜராத் கலவரத்தில் மோடிக்கு இருந்த தொடர்பு காரணமாக, அவருக்கு அமெரிக்க விசா மறுக்கப்பட்டது தொடர்பாக, பார்வையாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

“விசா விவகாரத்தில் பிரச்சினை ஏற்பட்டுள்ள நிலையில், நீங்கள் பிரதமர் ஆன பிறகு அமெரிக்கா செல்வீர்களா?’’ எனப் பார்வையாளர்களில் ஒருவர் கேட்டார்.

அதற்குப் பதில் அளித்த மோடி, “குஜராத் முதல்வராக அமெரிக்கா செல்ல 2005-ஆம் ஆண்டு விசா கேட்டபோது அனுமதி அளிக்கவில்லை. நான் எப்படிப்பட்ட இந்தியாவை உருவாக்க நினைக்கிறேன் என்றால், அமெரிக்கர்கள் இந்திய நாட்டு விசா வாங்க வரிசையில் நிற்பார்கள்’” எனக் கூறினார். அப்படிப்பட்டவர் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள நிலையில், அமெரிக்காவில் முறைகேடாக தங்கி இருந்த இந்தியர்கள் முதன்முறையாக நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

‘அமெரிக்க அதிபராக டிரம்ப் பொறுப்பேற்ற பின்னர், அங்கு எடுத்துவரும் நடவடிக்கைகளால், அதிக பாதிப்பினைச் சந்திக்கவுள்ள ஆசிய நாடாக இந்தியா இருக்கிறது என்பதை வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதன் ஒருபகுதி நடவடிக்கைதான் நாடு கடத்தும் நிகழ்வுகள்’ எனவும் கூறுகின்றனர்.

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தபின்னர் கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் இருந்து அமெரிக்கா செல்பவர்களின் எண்ணிக்கை 77 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக, குஜராத், ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களில் படித்த இளைஞர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு இல்லை என்பதால், வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக செல்வது அதிகரித்துள்ளது. இப்போது சட்டவிரோதக் குடியேற்றங்களை, அமெரிக்கா கண்டறிந்து வருவதில் அதிகம் பாதிக்கப்படும் நாடுகளில் இந்தியா முதன்மையாக உள்ளது. இந்தச் சிக்கலுக்கு வெளியுறவுத்துறை ரீதியாகத் தீர்வு காண்பதிலும், மோடி அரசு தோல்வி அடைந்துள்ளதையே ‘நாடுகடத்தல் நிகழ்வு’ வெளிச்சமிட்டுள்ளது.

2019-ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர் தேர்தலின்போது இந்தியர்களின் வாக்குகளைக் கவர்வதற்காக டிரம்புக்கு வாக்கு சேகரிக்க, அமெரிக்காவுக்குச் சென்றார் மோடி.

**மோடி, இன்று வேலைதேடி அமெரிக்கா சென்ற இந்தியர்களையும் கைவிட்டுள்ளார். இந்தியாவிலேயே இளைஞர்களைக் கைவிட்டவர்கள், அதுபற்றி ஏன் கவலைப்படப் போகின்றனர்?**


அப்போதைய தேர்தலில் டிரம்ப் வெற்றிபெறவில்லை. அதன்பின்னர் நடந்துமுடிந்த அமெரிக்கத் தேர்தலின்போதும், அமெரிக்காவில் டிரம்புக்கு ஆதரவான நிலையை, அங்குள்ள இந்து அமைப்புகள் எடுத்தன.

அதுமட்டுமல்லாமல், இந்தியாவிலும் பல ஆலயங்களில், டிரம்ப் வெற்றிபெற வேண்டும் என வழிபாடுகளை நடத்தினர், பா.ஜ.கவினரும் அவர்களின் ஆதரவாளர்களும். இந்த வழிபாடுகள் மற்றும் பிரச்சாரங்கள் செய்தவர்கள் அமெரிக்காவுக்குச் சட்ட விரோதமாகச் சென்ற இந்தியர்கள் குறித்து, எந்த அக்கறையும் கொண்டிருக்கவில்லை. அமெரிக்கர்கள் இந்திய நாட்டு விசா வாங்கக் காத்திருப்பார்கள் என்று சொன்ன மோடி, இன்று வேலைதேடி அமெரிக்கா சென்ற இந்தியர்களையும் கைவிட்டுள்ளார். இந்தியாவிலேயே இளைஞர்களைக் கைவிட்டவர்கள், அதுபற்றி ஏன் கவலைப்படப் போகின்றனர்?

## திராவிடத்தால் வாழ்கிறோம்

742

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131